# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE

INTEGRATED INVESTIGATION FORM-I

8073088

C

1. District : மாவட்டம் சேலம். PS: காவல்நிலையம் ஊ.த.க.பிரிவு. Year: ஆண்டு 2018 FIR No.: மு.த.அ. எண் 17/AC/2018 Date: நாள் 04/09/2018

2. (i) Act சட்டம்: - Sections பிரிவுகள்: Sec 7 of the PC Act 1988

   (ii) Act சட்டம்: - Sections பிரிவுகள்: as Amended by the Prevention of Corruption (Amendment)

   (iii) Act சட்டம்: - Sections பிரிவுகள்: Act 2018.

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை
   1) 24.8.2018 – மாலை சுமார் 04.30 மணி.
   2) 30.8.2018 – காலை சுமார் 10.30 மணி
   3) 31.8.2018 – காலை சுமார் 10.00 மணி.

   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 04.09.2018 Time : நேரம் 1800hrs

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 04.9.2018 Time : நேரம் 1800hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக கணினி மூலம் தட்டச்சு செய்யப்பட்ட புகார்.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் சுமார் 30 கி.மீ. கிழக்கு.

   Beat Number : முறைக் காவல் எண் - (b) Address : முகவரி ஆத்தூர் வட்டாட்சியர் மற்றும் ஆத்தூர் அலுவலகம்.

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம் -

6. Complainant /Informant (a) Name குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திருமதி D. இந்திராணி (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் திரு. நடராசன் (லேட்)

   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 46/2018 (d) Nationality : நாட்டினம் இந்தியர் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் -

   Date of Issue : வழங்கப்பட்ட நாள் - Place of Issue : வழங்கப்பட்ட இடம் -

   (f) Occupation : தொழில் - (g) Address : முகவரி கதவு எண் : 50 A, கணபதி சுவாமி நகர் 3வது வீதி, ஆட்டுபோத டவுன், சேலம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   திரு. ராஜேந்திரன், சர்வேயர், ஆட்டுபோத.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   -

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்) —

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்.
4/9/2018

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

04/09/2018 - 20.30hrs.

Name: பெயர் ப. கோமதி.
Rank: நிலை காவல் ஆய்வாளர், ஊரக மகளிர், சேலம். No. எண் .........

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p 2

<u>சமர்ப்பிக்கப்படுகிறது</u>

இன்று 04.09.2018ம் தேதி மாலை 18.00 மணிக்கு D.இந்திராணி க/பெ.தமிழரசன்(லேட்), கதவு எண்.50பி, கணபதி கவுண்டர் நகர் 3 ஆவது வீதி, வாழப்பாடி டவுன், சேலம் மாவட்டம் என்பவர் சேலம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் ஆஜராகி கொடுத்த கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட புகாரின் விபரம் பின்வருமாறு. அனுப்புதல் D.இந்திராணி க/பெ.தமிழரசன்(லேட்), கதவு எண்.50பி, கணபதி கவுண்டர் நகர் 3 ஆவது வீதி, வாழப்பாடி டவுன், சேலம் மாவட்டம் பெறுதல் காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை சேலம். அய்யா, நான் வாழப்பாடி டவுன் கணபதி கவுண்டர் நகர், 3 ஆவது வீதியில் எனது மகன்களுடன் வசித்து வருகிறேன். எனக்கு பிரபாகரன், நவீன்குமார் என்ற இரண்டு மகன்கள் உள்ளனர். பெரிய மகனுக்கு திருமணமாகிவிட்டது. எனது கணவர் சுமார் 23 வருடங்களுக்கு முன்பு உடல்நிலை சரியில்லாமல் இறந்து விட்டார். நான் கடந்த 2006 ஆம் வருடத்தில் எனது வீட்டின் அருகே வாழப்பாடி அக்ரஹார கிராம சர்வே எண்.64/4B - ல் 1312 ½ சதுரடி காலிமனை நிலத்தை சேலம், முராரி தெருவைச் சேர்ந்த நாகேந்திரன் மகன் திரு.ராஜ்குமார் என்பவரிடம் ரூ.36,500/–க்கு விலைக்கு வாங்கி அதை வாழப்பாடி சார்பதிவாளர் அலுவலகத்தில் எனது பெயரில் பதிவு செய்தேன். அதன்பிறகு கடந்த 2013 ஆம் வருடத்தில் மேற்படி அதே கிராம சர்வே எண். 102/2A ல் 1128 ¾ சதுரடி காலிமனை நிலத்தை எங்கள் ஊரைச் சேர்ந்த செல்வம் என்பவரின் மகன் மனோஜ்குமார் என்பவரிடம் ரூ.3,95,000/–க்கு விலைக்கு வாங்கி அந்த நிலத்தையும் வாழப்பாடி சார்பதிவாளர் அலுவலகத்தில் எனது பெயரில் பதிவு செய்தேன். இந்த இரண்டு காலிமனை நிலங்களும் எனது பெயருக்கு பட்டா மாற்றம் செய்யாமல் இருந்து வந்தது. அதனால் அந்த இரண்டு காலிமனைகளையும் எனது பெயரில் உட்பிரிவு செய்து பட்டா மாற்றம் செய்ய நான் 20.8.2018 அன்று 2 நிலங்களுக்குண்டான பத்திரங்கள் மற்றும் வில்லங்க சான்றுகள் ஆகியவைகளை எடுத்துக் கொண்டு வாழப்பாடி பஸ் நிலையம் அருகில் உள்ள இ சேவை மையத்திற்கு சென்று இரண்டு நிலங்களுக்கும் தனித்தனியாக ஆன்லைனில் விண்ணப்பங்கள் பதிவு செய்தேன். அதன்பேரில் வாழப்பாடி சர்வேயர் சௌந்தர் 24.8.2018 அன்று மதியம் சுமார் 2.30 மணிக்கு வந்து முதலில் பைபாஸ் அருகில் உள்ள 1128 ¾ சதுரடி காலிமனை நிலத்தை அளந்து விட்டு, அதன் பின்னர் எனது வீட்டின் அருகில் உள்ள 1312 ½ சதுரடி காலிமனை நிலத்தை அளந்து விட்டு மாலை சுமார் 4.30 மணியளவில் என்னிடம் உட்பிரிவு செய்ய மேப் போட்டு, பட்டா மாறுதல் உத்தரவு பெற்றுத்தர ஒவ்வொரு காலிமனை நிலத்திற்கும் தனித்தனியாக ரூ.10,000/–

வீதம் மொத்தம் ரூபாய்.20,000/- கொடுத்தால் மட்டுமே பட்டா மாறுதல் உத்தரவு பெற்றுத்தா முடியும் என்று சொன்னார். அதற்கு நான் அவரிடம் நானே மிகுந்த கஷ்டத்தில் இருக்கிறேன் என்னிடம் அவ்வளவு பணம் இல்லை என்று சொன்னேன். அதற்கு அவர் பணம் இல்லாமல் ஒன்றும் வேலையாகாதும்மா, பணம் ரெடி பண்ணி வைங்கம்மா நானே வீட்டுக்கு வந்து வாங்கிக்கிறேன் என்று சொல்லிவிட்டு சென்று விட்டார். அவர் சொன்னபடி என்னால் பணம் ரெடி பண்ண முடியவில்லை. ஆனால் அவர் 30.8.2018 காலை சுமார் 10 ½ மணிக்கு என் வீட்டிற்கு வந்தார். நான் அவரிடம் மிகுந்த கஷ்டத்தில் இருக்கிறேன் அவ்வளவு பணம் புரட்டமுடியவில்லை என்று சொன்னபோது அவர் ஏம்மா, இதில் நிறைய வேலை இருக்குதும்மா, இருந்தாலும் நீங்க கேட்கிறதால் உங்களுக்காக ஒரு பிளாட்டுக்கு 2,000/– வீதம் 4,000/– குறைத்துக் கொள்கிறேன். பணம் ரூ.16,000/–த்தை ரெடி செய்து வையுங்கம்மா, நான் வந்து வீட்டிலயே வாங்கிக்கிறேன் என்று சொன்னார். நான் வேறு வழியில்லாமல் சரி சார் நான் ஆபீசுக்கு வந்து உங்களைப் பார்க்கிறேன் என்று சொன்னேன். அதற்கு அவர் ஆபீசுக்கு நீங்க வரவேணாம்மா, நானே உங்க வீட்டிற்கு வந்து பணத்தை வாங்கிக்கறேன் என்று சொல்லிவிட்டு அவர் அங்கிருந்து புறப்பட்டு சென்று விட்டார். அதன்பின்னர் அவர் மீண்டும் மறுநாள் 31.8.2018 வெள்ளிக்கிழமை காலை சுமார் 10 மணிக்கு என் வீட்டிற்கு வந்து என்னிடம் ஏம்மா, பணம் ரெடியா என்று கேட்டார். அதற்கு நான் இல்ல சார் இன்னும் பணம் ரெடி பண்ண முடியல, பையன் வேற வண்டிக்கு போயிட்டான் என்று சொன்னதற்கு அவர் உங்களுக்காக கடைசியா ரூ.1,000/– குறைச்சுக்கறேன், மீதிப் பணம் ரூ.15,000/– கொடுத்தால் மட்டும் இரண்டு பிளாட்டுக்கும் தனித்தனியா மேப் போட்டு, சப் டிவிசன் செய்து, தனிப் பட்டா பெற்றுத்தர ஏற்பாடு செய்யமுடியும் என்று கண்டிப்பாக சொன்னார். அதற்கு நான் அவ்வளவு பணத்தை என்னால் ஒரேடியாக புரட்ட முடியாது என்று சொன்னேன். அதற்கு அவர் முதல்ல 10,000/– மட்டும் ரெடி பண்ணி வையுங்க எனக்கு இரண்டு மூன்று நாட்களுக்கு வர நேரமில்லை புதன்கிழமை காலை 8 மணி சுமாருக்கு வீட்டுக்கு வந்து வாங்கிக்கிறேன். மீதி பணம் ரூ.5,000/-த்தை நான் தனிப்பட்டா உத்தரவை ரெடி பண்ணி கொடுக்கும்போது வாங்கிக்கொள்கிறேன் என்று சொல்லிவிட்டு சென்று விட்டார். எனக்கு 3 நாட்களாக உடல்நிலை சரியில்லாமல் இருந்ததால் என்னால் உடனடியாக வந்து புகார் கொடுக்க முடியவில்லை. எனக்கு வாழப்பாடி சர்வேயர் சௌந்தர் அவர்களுக்கு லஞ்சமாக பணம் ரூ.15,000/– கொடுத்து நான் வாங்கிய வீட்டுமனை நிலங்களுக்கு உட்பிரிவு செய்து தனிப்பட்டா பெற விருப்பமில்லை. எனவே என்னிடம் லஞ்சமாக பணம் கேட்ட திரு.சௌந்தர் மீது நடடிவக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு Sd xxxxxx 04.09.2018. (D.இந்திராணி).

Sir, Received the above computer typed complaint on 04.09.2018 at 18.00 hrs. The genuineness of the complaint was verified through sources and found to be genuine and the integrity and antecedents of the accused was also verified through sources and found to be bad. Hence, I registered a case in Salem Vigilance and Anti-Corruption Cr.No.17/AC/2018 u/s 7 of PC Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 at 19.00 hrs today on 04.09.2018 and took up for investigation. Sd xxxx 04.09.2018 (R.GOMATHI), INSPECTOR OF POLICE, V&AC, SALEM.

Original FIR along with original computer typed complaint of Tmt.D.Indirani W/o. Tamilarasan (Late), Door No.50B, Ganapathy gounder Nagar, 3rd street, Valapadi Town, Salem District is submitted to the Hon'ble Special Judge for Trial of cases under Prevention of Corruption Act, Salem and a copy of FIR is submitted to the Director, Vigilance and Anti-Corruption, Chennai.

(R.GOMATHI),
INSPECTOR OF POLICE,
V&AC, SALEM.